# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2149/27 - 2019 නොවැම්බර් මස 15 වැනි සිකුරාදා - 2019.11.15

*2149/27 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**செயலாளர்கள் பற்றிய பிரமாணக் குறிப்பு**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் விதிக்கப்பட்டதும் 1979 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 06 ஆந் திகதிய 48/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் மற்றும் இடையிடையே திருத்தப்பட்டதுமான செயலாளர்கள் பற்றிய பிரமாணக் குறிப்பை 2019.11.14 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படும் வண்ணம் மேலும் பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு திருத்துவதற்கு அதியுத்தமராம் சனாதிபதி அவர்கள் விதித்துள்ளார் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

உதய ஆர். செனெவிரத்ன,<br>
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி செயலகம்,<br>
கொழும்பு 01,<br>
2019, நவெம்பர் 14.

**அட்டவணை**

அதன் 9 அ ஆம் பந்தியை அடுத்துப் பின்வரும் புதிய பந்தி உள்ளடக்கப்படுவதுடன், அது சொல்லப்பட்ட பிரமாணக் குறிப்பின் 9 ஆ ஆம் பந்தியாக நடைமுறைப்படல் வேண்டும் :

9 ஆ இப்பிரமாணக் குறிப்பின் 9 அ ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் சொல்லப்பட்ட பிரமாணக் குறிப்பின் 1 அ பந்தியின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள அ அட்டவணையின் 05 இன் கீழ் மீள சேவையில் அமர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் அவ்வாறே ஏற்புடையதாகும்.


1A - G 31119 — 67 (2019/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.